**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**12**
**Defence**
**Court**

**Name** **: தட்சணாமூர்த்தி**

Father's/Husband Name :ஐயப்பன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24.02.2022

<u>முதல் விசாரணை</u>:

நான் தென்காசியில் செண்பக விநாயகர் கோவில் தெருவில் என் பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் தென்காசியில் ஆட்டோ ஓட்டுநராக இருந்து வருகிறேன் இறந்தபோன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை

விசாரித்தார்கள். அவர்களிடம் சம்பவம் பற்றி தெரியாது என்று சொன்னேன். **இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரித்தபோது குற்றலாம் சுபா பவனம் என் லாட்ஜில் வேலை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன குமார் பாண்டியனை தெரியாது. தமிழ்நாடு முஸலீம் முனனேற்ற கழகத்தை தெரியும் அதில் தென்காசி பொறுப்பாளரை தெரியாது. 2007 ம் ஆண்டு தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகம் மற்றும் குமார்பாண்டியனுக்கு ஏற்பட்ட முன்விரோதம் பற்றி எனக்கு நேரில் தெரியாது. சம்பவம் நடந்தபின்னர் அது பற்றி நாளிதழ் மூலம் தெரிந்து கொண்டேன். நான் கூறுவது தவறு என்றும் இறந்துபோன குமார் பாண்டியன் தென்காசி இந்து முன்னனி தலைவராக இருந்தார் என்றும் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் தென்காசி பொறுப்பாளரான ஹனீபா என்ற நாகூர் ஹனீபாவும் முருகேசன் என்ற அப்துல்லாவும் குமார் பாண்டியனை கொலை செய்து விட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும் அவர்கள் முன் விரோதம் காரணமாக குமார் பாண்டியன் குடும்பத்தினரை கொலை செய்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையிணல் கூறியிருக்கிறேன் என்றால் கடந்த 14.08.2007 ம் தேதி காலையில் நான் சுரேஷ், மாலையப்பன், முத்து, பிரபு, ஆகியோர் கூளக்கடை பஜார் சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது ஹனிபாவும் அப்துல்லாவும் அவர் கூட்டாளிகளும் ஆட்டோகளில் கிழக்கு நோக்கி சென்றார்கள் என்றும் அலாவுதீன் என்பவர் மோட்டார் சைக்கிளில் முன்னே சென்று கொண்டிருந்தார். சக்தி பாண்டியன்

ஓட்டி வந்த அம்பாசிடர் காரின் மீது மோதி காரை நிறுத்தினார் என்றும் காரில் இறங்கி ஓடியவர்களை சிலர் வழி மறித்தால் காரில் இருந்தவர்கள் மேற்கு நோக்கி ஓடினார்கள் என்றும் அவர்கனை ஹனிபா, அப்துல்லா, மற்றும் அவர்களது கூட்டாளிகளான நாகூர் மீரான் , மீரான் மைதீன், ஹசன் கனி, நவாஸ், சையது அலி மேலும் சிலர் ஆயுதங்களுடன் விரட்டி தாக்கினார்கள் என்றும் பதிலுக்கு செந்தில், சுரேஷ் , சேகர் மற்றம் அவர் நண்பர்களும் பதில் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் சேகரை ஹனிபா அரிவாளால் வெட்டியும், அப்துல்லா, அரிவாளால் வலது முழங்கை மற்றும் இடது முழங்கையை வெட்டியும் அசன் கனி சேகரை வலது விளாலில் குத்தியும், இராஜா முகமது வலது காதுக்கு கீழ் வெட்டினார் என்றும், இதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே சம்பவத்தில் இறந்துபோன செந்திலை அலாவுதீன் அரிவாளால் இடது தலையில் பகுதியில் வெட்டினார் என்றும் சுரேசை செய்யது அலி பட்டா கத்தியால் வெட்டினார் என்றும், சம்பவத்தை பார்த்து பயந்து நான் ஓடிவிட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் தென்காசி பழைய பேருந்து நிலையத்தின் அருகிலும் புதிய பேருந்து நிலையத்தின் அருகிலும் பிறந்தது முதல் வளர்ந்து வந்தேன். எதிரிகள் வசிக்கும் பகுதி அதே இடத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஒரு மாத காலம் மட்டும் தான் திருப்பூரில் இருநதேன். நான் எதிரிகளுக்கு பயந்து திருப்பூருக்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் தேடுவதாக தெரிந்து 20.08.2007 ம் தேதி ஸ்ரீ வைகுண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்தேன் எனறால் சரிதான். என் மீதும் குற்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த

வழக்கில் இருந்து தப்பிக்க எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**.13**
**Defence**
**Court**

**Name : குட்டி மணி என்ற மணிகண்டன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24.02.2022

முதல் விசாரணை:

நான் தென்காசியில் சிதம்பராாஈஸ்வரர் கோயில் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். இறந்தபோன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும்

தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

தென்காசியில் 2006 மற்றும் 2007ம் ஆண்டில் பள்ளி வாசல் கட்டுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். இறந்துபோன குமார் பாண்டியனை தெரியாது. தமிழக முஸ்லீம் முன்னேற்ற கழகம் இருப்பது எனக்கு தெரியாது. தென்காசி கிளையின் பொறுப்பாளர்களை தெரியாது. அது தொடர்பாக எதிரிகளுக்கும் குமார்பாண்டியனுக்கும் பிரச்சனை இருந்தது பற்றியும் தெரியாது. குமார் பாண்டியன் குடும்பத்தினரை கொல்ல முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் திட்டம் தீட்டிவந்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சக்தி பாண்டியன் அறிவுரை படி குமார் பாண்டியன் குடும்பத்தினரும் நானும் என் நண்பர்களும் வெளியே செல்லும்போது தனியாக செல்லாமல் ஆயுதங்களுடன் செல்வதை வழக்கமாக கொண்டிருநதோம் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் கடந்த 14.08.2007ம் தேதி காலையில் நான் எனது நண்பர்கள் சுரேஷ், மற்றும் சேகர் ஆகியோர் கூளக்கடை பஜார் சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது ஹனிபாவும் அப்துல்லாவும் அவர் கூட்டாளிகளும் ஆட்டோகளில் கிழக்கு நோக்கி சென்றார்கள் என்றும் அலாவுதீன் என்பவர் மோட்டார் சைக்கிளில் முன்னே சென்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் சக்திபாண்டியனின் தம்பி செந்தில்,சுரேஷ் கூட்டாளிகளுடன் ஓடிவந்தபோது அவர்களை ஹனிபா, அப்துல்லா,மற்றும் அவர்களது கூட்டாளிகளான நாகூர்மீரான், மீரான் மைதீன்,

ஹசன் கனி, நவாஸ், சையது அலி மேலும் சிலர் ஆயுதங்களுடன் விரட்டி தாக்கனிார்கள் என்றும் பதிலுக்கு நானும் என்னுடன் சேர்ந்தவர்களும் தாக்கினோம் என்றும் செந்தில், சுரேஷ் , சேகர் மற்றம் அவர் நண்பர்களும் பதில் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் சேகரை ஹனிபா அரிவாளால் வெட்டியும், அப்துல்லா, அரிவாளால் வலது முழங்கை மற்றும் இடது முழங்கையை வெட்டியும் அசன்கனி சேகரை வலது விளாலில் குத்தியும், இராஜா முகமது வலது காதுக்கு கீழ் வெட்டினார் என்றும் நான் அந்த சம்பவத்தில் இருந்தேன் என்றும் இதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே சம்பவத்தில் இறந்துபோன செந்திலை அலாவுதீன் அரிவாளால் இடது தலையில் பகுதியில் வெட்டினார் என்றும் சுரேசை செய்யது அலி பட்டா கத்தியால் வெட்டினார் என்றும்,சம்பவத்தின் தொடர்ச்சியாக சேகர், சுரேஷ் மற்றும் அசன் கனி சம்பவ இடத்தில் இறந்து போனார்கள் என்றும் செந்தில் என்ற செந்தில் குமார் என்பவரை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும், என் மீதும் வழக்கு உள்ளது. அந்த வழக்கில் இருந்து தப்பிக்க எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் குடியிருக்கும் இடத்திற்கும் எதிரிகள் குடியிருக்கும் இடத்திற்கும் ஒரு

கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.14**
**Defence**
**Court**

**Name** **:** பிரபு

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24.02.2022

__முதல் விசாரணை__:

நான் தென்காசியில் களக்கோடி தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பூ வியாபாரம் செய்து வருகிறேன். இறந்தபோன செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியும், மற்ற இருவரையும் தெரியாது. . சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

இந்து முன்னனி என்ற அமைப்பு இருப்பது தெரியும். நான் அதன் உறுப்பினர் அல்ல. தமிழ் நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை தெரியும். ஆஜர் எதிரிகளையும் யார் யார் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக உறுப்பினர் என்று தெரியாது. இறந்துபோன குமார் பாண்டியனை தெரியும். இந்து முன்னனி அமைப்பில் என்ன உறுப்பினர் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது நான் இந்து முன்னனி தென்காசி பிரிவில் உறுப்பினர் என்றும் 2006 ம் ஆண்டு குமார் பாண்டியன் தென்காசி இந்து முன்னனி கிளையின் தலைவராக இருந்தார் என்றும் அதனால் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவருக்கும் குமார் பாண்டியனுக்கும் விரோதம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக குமார் பாண்டியன் கொலை செய்யப்பட்டது எனக்கு தெரியாது. அதனை தொடர்ந்து தமிழ் நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டு இரு தரப்பபினருக்கும் ஏற்பட்ட முன்விரோதத்தின் காரணமாக தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்த ஹனீபா, மற்றும் அப்துல்லா அவரது கூட்டாளிகள் விரோதம் கொண்டிருந்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.08.2007 ம் தேதி காலையில் நான் சுரேஷ், மாலையப்பன், முத்து, தட்சணாமூர்த்தி, பூமாரி ஆகியோர் கூளக்கடை பஜார் சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது

ஹனிபாவும் அப்துல்லாவும் அவர் கூட்டாளிகளும் ஆட்டோகளில் கிழக்கு நோக்கி சென்றார்கள் என்றும் அலாவுதீன் என்பவர் மோட்டார் சைக்கிளில் முன்னே சென்று கொண்டிருநதார். சக்தி பாண்டியன் ஓட்டி வந்த அம்பாசிடர் காரின் மீது மோதி காரை நிறுத்தினார் என்றும் காரில் இறங்கி ஓடியவர்களை சிலர் வழி மறித்தால் காரில் இருந்தவர்கள் மேற்கு நோக்கி ஓடினார்கள் என்றும் அவர்கனை ஹனிபா, அப்துல்லா, மற்றும் அவர்களது கூட்டாளிகளான நாகூர் மீரான் , மீரான் மைதீன், ஹசன் கனி, நவாஸ், சையது அலி மேலும் சிலர் ஆயுதங்களுடன் விரட்டி தாக்கினார்கள் என்றும் பதிலுக்கு செந்தில், சுரேஷ் , சேகர் மற்றம் அவர் நண்பர்களும் பதில் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் சேகரை ஹனிபா அரிவாளால் வெட்டியும், அப்துல்லா, அரிவாளால் வலது முழங்கை மற்றும் இடது முழங்கையை வெட்டியும் அசன் கனி சேகனை வலது விளாலில் குத்தியும், இராஜா முகமது வலது காதுக்கு கீழ் வெட்டினார் என்றும், இதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே சம்பவத்தில் இறந்துபோன செந்திலை அலாவுதீன் அரிவாளால் இடது தலையில் பகுதியில் வெட்டினார் என்றும் சுரேசை செய்யது அலி பட்டா கத்தியால் வெட்டினார் என்றும், சம்பவத்தை பார்த்து பயந்து நான் ஓடிவிட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை தெரியாது. களக்கோடி தெரு புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ஆயக்குடி செல்லும் சாலையில் உள்ளது. ஆயக்குடி சாலையில் இருந்து தென்காசி பஜார் பகுதி வரை இஸ்லாமியர்கள் அதிகம் குடியிருக்கும் பகுதி என்றால் சரியல்ல. எதிரிகள் நான் வசிக்கும் பகுதியில் வசிப்பவர்கள் என்றால் சரியல்ல. நான்

எங்கள் பகுதியில் வசிக்கும் நபரை வேண்டுமென்றே தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒரு வார காலம் மட்டும் தான் கேரளாவில் இருநதேன். நான் எதிரிகளுக்கு பயந்து கேரளாவிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் தேடுவதாக தெரிந்து 27.08.2007 ம் தேதி காங்கேயம் நீதித்துறை நடுவர் நீதிமன்றததில் சரண் அடைந்தேன் எனறால் சரிதான். என் மீதும் குற்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிக்க எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.